# டிசம்பர், 2017 - எண்ணெய் பனை சாகுபடிக்கான ஆலோசனைகள்

- எண்ணெய்ப்பனையில் ஊடுபயிர் செய்யும் போது, எண்ணெய்ப்பனை மற்றும் ஊடுபயிருக்கு தேவையான நீர், ஊட்டச்சத்துகளை தனித்தனியே வழங்க வேண்டும்..

- எண்ணெய்ப்பனைத் தோட்டங்களில், நுனி இலைகள் கொக்கி வடிவத்தில் மாறுவது (ம) மீன் முள் தோற்றத்துடன் இருப்பது போரான் குறைபாடாகும். இதை கட்டுப்படுத்த 100 கிராம் போராக்ஸ் ஐ , மண் (ம) இலை பரிசோதனைக்கு பின் பயன்படுத்தலாம்.

- எண்ணெய்ப்பனைத் தோட்டங்களில், 2,4-D, 2,4,5-T மற்றும் தாமிரம் சார்ந்த களைக்கொல்லிகளை அறவே தவிர்க்க வேண்டும். ஏனேன்றால், எண்ணெய்ப்பனையின் வளர்ச்சிக்கு இவை ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும்.

- எண்ணெய்ப்பனைத் தோட்டங்களில், இல்லைக்கூட்டுப் புழுக்கள் (இலைகளின் அடிப்பகுதியில் தொங்கிக் கொண்டிருக்கும்) இலைகளை தின்று சேதப்படுத்தும். இதை கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும், 10 மில்லி.

- எண்ணெய்ப்பனை தோட்டங்களில் மொட்டு அழுகல் வராமல் தடுக்க, மழைக்காலம் முடிந்த பின் பனையின் குருத்துப் பகுதியை 1% பெவிஸ்டினை கொண்டு நனைத்து விடலாம்.

- முதிர்ந்த இலைகள் பழுப்பு (அ) சாக்லேட் நிறமாகி பனைகள் முற்றிலுமாக காய்வது தண்டு அழுகல் நோயின் அறிகுறிகளாகும். மேலாண்மை செய்யத் தவறினால் இளம் இலைகளுக்கு அழுகல் பரவி பனைகள் முற்றிலுமாக இறந்துவிடும்.